**செய்தி வெளியீடு எண்.518** **நாள்.3.7.2008**

**மாநிலத் திட்டக் குழு தயாரித்துள்ள தமிழகத்திற்கான 11வது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை முதலமைச்சர் கலைஞர் வெளியிட்டார்**

தமிழகத்திற்கான ஆண்டுத் திட்டங்களை உருவாக்குதல், ஐந்தாண்டுத் திட்டங்களை வடிவமைத்தல், பகுதி இரண்டின் கீழ் வரும் செயல் திட்டங்களுக்கு நிதி ஒப்புதல் அளித்தல், பல்வேறு முகமைகளின் வாயிலாக ஆய்வுகள் மேற்கொண்டு கொள்கை முடிவுகள் எடுக்க அரசுக்கு உதவுதல், மாநில நிலப் பயன்பாட்டு வாரியம் வழியாக நிலப் பயன்பாட்டு முறைகளை ஆய்வு செய்தல், மனித மேம்பாட்டு ஆதார மையத்தின் வழியாக மனித மேம்பாடுகள் குறித்த கருத்துகளை அரசுக்கு வழங்குதல் முதலிய பணிகளின்மூலம் தமிழகத்தின் முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் விரைவுபடுத்திடும் நோக்கில், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகத்தில் 1971ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாள் மாநிலத் திட்டக் குழு அமைக்கப்பட்டது. இது, மத்தியத் திட்டக்குழுவின் கொள்கைகளுக்கு முன்னுரிமை அளித்தும், மாநிலத்தின் தேவைகளை முதன்மைப்படுத்தியும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து திட்டங்களை உருவாக்கி வருகிறது.

2006இல் இந்த அரசு அமைந்தபின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாநிலத் திட்டக்குழு திருத்தியமைக்கப்பட்டது. இக்குழு தற்போது 2007–2008 முதல் 2011–2012 வரையிலான 11வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான அறிக்கையினை ஆங்கிலத்திலும், தமிழிலும் தயாரித்துள்ளது. தமிழ் மொழியில் உருவாக்கப்பட்டுள்ள 11வது ஐந்தாண்டு திட்ட அறிக்கையை மாநில திட்டக்குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன் திட்டக் குழு உறுப்பினர்கள் முன்னிலையில் வழங்க, அதனை மாநில திட்டக்குழுவின் தலைவராகிய முதலமைச்சர் கலைஞர் இன்று (3.7.2008) வெளியிட்டார்.

நடுவண் அரசின் திட்டக் குழு 11வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 9 விழுக்காடு வளர்ச்சி இலக்கினை இயைந்த வளர்ச்சி அணுகுமுறை வாயிலாக எய்திட வேண்டுமென முன்மொழிந்துள்ளது.

இத்திட்ட காலத்தில் வேளாண்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. வேளாண் துறையில் ஆண்டு வளர்ச்சி 4 விழுக்காட்டினை எட்ட வேண்டும் எனும் இலக்கு முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது.

10வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்திற்கான மொத்த திட்ட அளவு 43 ஆயிரத்து 400 கோடி ரூபாய்; அது, 11வது திட்ட காலத்திற்கு இரு மடங்காக 85 ஆயிரத்து 344 கோடி ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது.

இதில், வேளாண்மை மற்றும் பாசனத் துறைக்கான திட்டச் செலவு 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் என்பதிலிருந்து 11 ஆயிரத்து 145 கோடி ரூபாய் எனவும், ஊரக வளர்ச்சித் துறைக்கு 5 ஆயிரத்து 400 கோடி ரூபாய் என்பது 10 ஆயிரத்து 241 கோடி ரூபாய் எனவும், மின்சாரத் துறைக்கு 5 ஆயிரத்து 800 கோடி ரூபாய் என்பது 10 ஆயிரத்து 743 கோடி ரூபாய் அளவுக்கும், தொழில் துறைக்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் என்பது 3 ஆயிரத்து 716 கோடி ரூபாய்

எனவும், சாலைகள் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு 5 ஆயிரத்து 900 கோடி ரூபாய் என்பது 11 ஆயிரத்து 647 கோடி ரூபாய் எனவும், சமூகப் பணிகளுக்கு 19 ஆயிரம் கோடி ரூபாய் என்பது 36 ஆயிரத்து 733 கோடி ரூபாய் என்றும், இதர பணிகளுக்கான திட்டச் செலவு 800 கோடி ரூபாய் என்பது ஓராயிரத்து 121 கோடி ரூபாய் என்றும் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த திட்ட நிதி ஒதுக்கீடுகள் மூலம் 11வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மைக் குறிக்கோளான மாநில பொருளாதாரத்தில் ஆண்டு வளர்ச்சி வீதம் 9 விழுக்காட்டினைப் பெறுவதற்குரிய தொடர் முயற்சிகளைத் தமிழக அரசு மேற்கொள்ளும்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன், உறுப்பினர்கள் திரு. பெ.ஜெகதீசன், திரு. தமிழருவி மணியன், பேராசிரியர் ஜி. சிதம்பரம், திரு.லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு), முனைவர் இராம.சீனுவாசன், நிதித்துறைச் செயலாளர் திரு. கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., உறுப்பினர் செயலர் முனைவர் திருமதி. அனுராதா கட்டி இராஜீவன், இ.ஆ.ப., மாநில ஊரக சுகாதார இயக்கத்தின் மாநில திட்ட இயக்குநர் திருமதி கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *